# மதுரைச் சொக்கநாதர் :
# : வருக்கக்கோவை.

ஆசிரியர்:

கவிராயர், சு. நல்லசிவன் பிள்ளை.

பதிப்பாளர்:

பேராசிரியர், பு. சி. புன்னைவனநாதன்.

உ

திருச்சிற்றம்பலம்

# மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவை

[குறிப்புரையுடன்]


ஆசிரியர்:

மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலை ஆசிரியர், கவிராயர்

திரு. சு. நல்லசிவன் பிள்ளை.



பதிப்பாளர்:

தருமபுரம் ஆதீனம்

கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேராசிரியர்

வித்துவான்

திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார்.

நன்கொடையாளர்:

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்.



பதிப்புரிமை காக்கப்பட்டுளது.



சருவசித்து—1948. விலை. 0-8-0



மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

பிரதிகள் 400.

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.
P.I.C.Q.H. No. T.E. 68. 5–1–48.

சிவமயம்

# மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவை

## ஆக்கியோன் முன்னுரை.

### திருவாசகம்

தாரா அருளொன் றின்றியே தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும் அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே.

### திருவிளையாடல்

சொக்கலிங்கமூர்த்தி

பூவி னாயகன் பூமக னாயகன்
காவி னாயக னாதிக் கடவுளர்க்
காவி நாயகன் அங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி யேத்துவாம்.

கோடீச்சுரம் ஏரண்டபுரம் என நூல்களில் வழங்குவதும், கும்பகோணத்திற்கு அருகில் காவிரி நதியின் வடபாலுள்ளதும், தேவாரம் பெற்றதுமாகிய கொட்டையூர் என்னுந் தலத்தில் பரம்பரைச் சைவாசாரிய மரபினரும், கோடீச்சுரக் கோவை முதலிய பலபிரபந்தங்களை ஆக்கியோரும், தஞ்சை சரபோஜி மன்னர் சமூக வித்துவானும் ஆகிய ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகரவர்கள் திருமரபிலுதித்துத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 19 ஆம் பட்டத்துத் தலைவர்களாக வீற்றிருந்த அருங்கலை விநோதரும், ஆயிரம் ரூபாய்த் தமிழ்ப் பரிசு

முதலிய எண்ணிறந்த பரிசுகள் வழங்கித் தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவிவந்தவர்களு மாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சாமிகள், சங்க நூல்களை நாடுதோறும் நகர்தோறுஞ் சென்று தேடி யாராய்ந்து குறிப்புரை அரும்பதவுரை முதலியனவும்எழுதி அச்சிற் பதிப்பித்து உலகத்திற் குதவிய பேருபகார சீலரான காலஞ் சென்ற சென்னை பிரமஸ்ரீ மஹா மஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமி நாதையரவர்களிடம், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சைவ வேளாண் மரபினருள் புலமை வாய்ந்தவர் எவரேனும் இருப்பின் அவரால் தங்கள் ஆத்மார்த்த மூர்த்தியாகிய மதுரைச் சொக்கநாதர் மீது ஒரு வருக்கக் கோவை இயற்றுவிக்கச் செய்தால் அதற்குரிய பரிசு வழுங்குவதுடன் நூலை மடத்து வெளியீடாக வெளியிடவுங் கூடுமென்று தங்கள் கருத்தைத் தெரிவிக்க, அதனை பிரமஸ்ரீ ஐயரவர்கள் எனக்கறிவித்து அங்ஙனம் பாடுக என்று கூறியருளினார்கள்.

அங்ஙனமே 'மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவை' என்னும் பெயருடன் இந்நூலைப் பாடி முடித்து, பனசைத் திரு மடத்து 19ம் பட்டத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ தலைவர்களை நேரிற் றரிசித்து நூலைச் சமர்ப்பித்தேன். அவர்கள் நூலைப் பார்வையிட்டு அதற்குரிய பரிசும் வழங்கினார்கள். பின் அவர்கள் சுபானு ஹ பங்குனிமீ 13ம் நாள் (26-3-1944) ஞாயிற்றுக்கிழமை பரிபூரணமடைந்தார்கள்.

இப்பொழுது 20-வது பட்டத்துத்தலைவர்களாக எழுந்தருளியிருக்கிறவர்களும், தமிழபிமானம் மிகவும் வாய்ந்தவர்களுமான ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்திசுவாமிகள் திருமுன் கோவை அச்சிடும் விஷயமாகத் தெரிவித்தேன். அவர்கள் கால விளம்பனமின்றி, உடனே நூறு வெண்பொற் காசுகளையருளி' நூலை வெளியிடும்படி அனுக்கிரகித்தார்கள். அவர்கள் வள்ளன்மை மிக மிகப் போற்றத்தக்கது. அவர்கட்கு எனது அன்பார்ந்த வணக்கத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை ஆக்குவித்த ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிக ளவர்கட்கும், உலகமறியாதிருந்த என்னையும் பொருட்படுத்தி என் பெயரை, சுவாமியவர்கட்குத் தெரிவித்து நூலை ஆக்குமாறு செய்த பிரமஸ்ரீ மஹா மஹோபாத்தியாய ஐயரவர்கட்கும் எனது நன்றி யுரித்தாகின்றது. இந்நூல் அச்சிடும் விஷயமாக என்னை இப்போதுள்ள பனசை மடத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ தலைவர்களிடம் அழைத்துச் சென்று தரிசனை செய்வித்து, பொருளுதவுதற்குக் காரணராகியிருந்த தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமான திருவாளர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கட்கு எனது அன்பார்ந்த நன்றி செலுத்துகின்றேன்.

எனது தேகத்தளர்ச்சியையும் யான் வியா நோய்வாய்ப் பட்டிருத்தலையும் உணர்ந்த எனது ஆருயிர்நண்பரவர்களும், திருநெல்வேலி ஜில்லா புத்தனேரி என்னும் பதியை வாழ்க்கைப் பூமியாகக் கொண்டுள்ளவர்களும், பல நகரங்களின் உயர்தரக் கல்லூரிகளில் தமிழாசிரியராக அமர்ந்திருந்தவர்களும், இப்பொழுது தருமபுர ஆதீனம் கீழ்த் திசைப் பல்கலைக் கல்லூரித் தலைமைத்தமிழ்ப் பேராசிரியராய் இருப்பவர்களுமாகிய திருவாளர் வித்துவான் திரு. பு. சி. புன்னைவனநாதமுதலியாரவர்கள் உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் இருந்து இந்நூலை அச்சிடுதற்குரிய பணிகளை யெல்லாம் ஏற்றுக் கொண்டு நூலை வெளிவரச் செய்தார்கள். அவர்கள் செய்த நன்றி என்றும் மறக்கற்பாற்றன்று. அவர்கட்கு எனதுமனமார்ந்த நன்றியைச் செலுத்துவதுடன், என் மீது கருணை கூர்ந்து இந்நூற்குப் பாயிர முதலியன எழுதியுதவி என்னைப் பெருமைப் படுத்தின ஆன்றோரனைவர்க்கும் யான் எனது நன்றியைச் செலுத்துகின்றேன். இந்நூலை அச்சிற் பதித்து விரைவில் வெளிவரச்செய்த தருபுர ஆதீனம் ஞானசம்பந்தம் பதிப்பகத்தார்க்கும் எனது நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்,

**சு. நல்லசிவன் பிள்ளை,**

ஆசிரியர்,

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை.

மதுரை,
30—11—1947.

# பதிப்புரை

பாட்டுக் குருதந் தமிழ்ச்சொக்க நாதர் பதமலர்த்தேன்
வேட்டுக் குறுகும் நலசிவ வண்டிசை வேண்டளவும்
கேட்டு மகிழ்ந்தே புன்னைவன நாதனும் கேடிலச்சிற்
கூட்டிப் புலவ ரகத்திற் குதவினன் கோவையையே.

கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோடாய்ந்த ஒண்டீந்தமிழில் ஆன்றமைந்த கல்வியறிவு சான்ற பெரும்புலவர்களால் என்றும் நன்கு மதிக்கப்படும் நல்லிசை நாற்கவிராயராகிய திரு. சு. நல்லசிவன் பிள்ளையவர்கள் நற்றமிழ்ச் சங்க நான்மாடக் கூடலிடம் நான் தமிழாசிரியராக வேலைபார்க்கப் புக்க 1914 ம் யாண்டு முதலே நன்கறிந்து நட்புக் கொண்டொழுகுபவர். 'பிறைநீர நீரவர் கேண்மை' என்ற பொன்மொழிக் கிலக்கியமானவர். 'இலக்குமி ராம்' கோவை மணிகளை யான் வெளிப்படுத்திய கால மெல்லாம் உடனிருந்தூக்கியவர்.

இந்த யாண்டு வைகாசி மாதத்தில், திருப்பனந்தாள் காசி மடத்து 20-வது தலைவர்களாக எழுந்தருளி யிருப்பவர்களும், முன்னோர் போற்றி வந்த முறையிலே தமிழையும் சமயத்தையும் போற்றி வளர்த்து வருபவர்களுமாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சாமிகளவர்களை அடைந்து விண்ணப்பித்துக்கொண்டனம். அவர்களும் அகங்கனிந்த அன்புடன் நூறு வெண்பொற் காசுதவி அச்சியற்றி வெளிப்படுத்த ஆணைதந்தார்கள்.

நான் வேலைபார்த்து வரும் தருமையாதீன ஞானசம்பந்தப் பதிப்பக வாயிலாகவே இக்கோவையை அச்சு இயற்றித்தர ஆசிரியரவர்கள் விரும்பினார்கள். ஆதீன வெளியீட்டு நெருக்கத்திடையே அச்சாகியும் உளது. கோவைச் செய்யுட்களின் அருமை பெருமை யாவும், ஆசிரியர் வரலாறு பாயிரம் பதிப்புரை முதலியவற்றைப் படிப்பவர் நன்குணர்வர். காலப்போக்குக்கிசையச் செய்யுட்களை இன்றியமையாச் சில இடங்களிற் சந்தி பிரித்துப் பதிப்பித்திருப்பினும், ஆசிரியரவர்கள் கருத்துப்படி அருஞ்சொற்கட்குக் குறிப்புரையும் தொகுக்கப்பட்டுள்ளது. செய்யுள் அச்சுப்பிழைகள் சிலவற்றிற்குக் குறிப்புரையில் திருத்தம் தரப்பட்டுள்ளது. கிளவி விளக்கம் முதலியன சேர்க்க விரும்பினும் காலதாமதத்தையும் காகிதச்சிக்கனத்தையும் கருதிப் பிற்பதிப்புகளிற் சேர்க்கலாமென்று விடுத்தனன்.

இவ்வரும்பெருங் கோவைப் பூமணத்தை நார் போன்ற நானும் அடைந்தின்புறச் செய்த சொக்கநாதன் துணையடிகளை என்றும் பணிந்து வணங்குகின்றனன்.

**பு. சி. புன்னைவனநாதன்,**
துணைத்தலைவர்,
கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரி.
தருமபுர ஆதீனம்.

"புலவரகம்"
30—12—47.

# நூல் வரலாறும் நூலாசிரியர் வரலாறும்

திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய வித்தியாசாலைக்கும், காவிரிப்பூம் பட்டினத்து மேலையூர் அறுபத்துமூவர் வித்தியாசாலைக்கும், சென்னைச் சைவ வித்தியானுபாலன யந்திரசாலைக்கும் அதிபதியாகிய யாழ்ப்பாணத்து வண்ணைநகர் ஸ்ரீமத். சுவாமிநாத பண்டிதரவர்கள் மனமுவந்தளித்தவை.

திருநெல்வேலியென்னுந் திருப்பதியைச்சார்ந்த சம்புலிங்கபுரம் என்னுங் கிராமத்திலே, சிவபக்தி அடியார் பக்திகளிற் சிறந்த ஸ்ரீமாந். சுப்பிரமணிய பிள்ளை என்பார் ஒருவர் இருந்தார். அவர் நப்பின்னை கேள்வர் நாராயணமூர்த்திபோல் உயிர் ஓம்புநீரர். அவர்செய் நற்றவத்தால் அவருக்கு நல்லசிவனார் என்னு நாமத்தோர் பிள்ளையார் பிறந்தார். அவர் நன்மாதுலர் ஸ்ரீமாந். திருவண்ணநாதக் கவிராயர், ஸ்ரீமாந். திரவியசங்கரநாராயணக் கவிராயர் இருவரும், தமது மருகர் நல்லசிவனார் என்னும் பிள்ளையாருக்கு உரிய காலத்திலே வித்தியாரம்பஞ்செய்து கல்விகற்பித்து வந்தார்கள். அவர்கள் கல்விநலன் நன்குணர்ந்த கவிராயராகலான், மருகனார் பருவங்கட்கும் அவற்றிற்கேற்ற அறிவிற்கு முரிய நன்னூல்களை நயந்து கற்பிக்க; நல்லசிவனார்

இயற்கையறிவுச் சிறப்புடன், செயற்கையறிவுச் சிறப்பும் உடங்கியைந்தோங்கலின், "நாளொரு வண்ணம் பொழுதொருமேனியாய்க்" கலைகள் நிரம்பக்கற்று, "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்னும் ஓத்தின் வண்ணம் நிற்குநிலையினராயினார்.

இங்ஙனம் நல்லசிவனார் செவ்விதினின்று அருங்கலை விநோதராய் அமர்தருங்காலத்து, அவர் அறிவின் மதுகையைப்பலர்வாயிலாக நன்கிதினுணர்ந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்து நிரந்தர அக்கிராசனாதிபதியாகவிருந்த மாட்சிமை பொருந்திய இராஜராஜேஸ்வர முத்துராமலிங்க சேதுபதியவர்களும், முன் அச்சங்கத்திற்குக் கௌரவ காரியதரிசியாக இருந்து இப்பொழுது உப அக்கிராசனாதிபதியாக இருக்கின்ற பிரமஸ்ரீ T. C. சீனிவாசையங்கார் B.A.,B.L., அவர்களும், தமிழ்ச்சங்கக் கலாசாலையில், ஓராசிரியராக நியமிக்க, அவர்; தலைவர் கண்டுகளிப்புறத் தமக்கெனவுரிய கடப்பாடுகளைச்சிறிதுந் தவறாமல், உரிய உரிய காலங்களில் நடத்திக்கொண்டிருக்கின்றார். அது நிற்க;

இத்தகுமாண்புடையார் முன்னர் இயற்றிய பிரபந்தமும் தனிப்பாட்டும் பல. அவற்றைப் பல வித்வான்கள் பார்த்துப் புகழ்ந்து பாராட்டினர். அதுவும் நிற்க.

இப்போது, "மதுரைச்சொக்கநாதர் வருக்கக் கோவை" எனப் பெயரிய கோவைப்பிரபந்தம் ஒன்று இயற்றியிருக்கின்றார். அதனை இயற்றுவித்தார் பல் கலாவிநோதரும், நல்லுபகாரரும், வித்வான் பரீக்ஷையில் தலை மாணாக்கராயினார்க்கு வருடந்தோறும் ஆயிரம் ரூபாய் பரிசளிப்பவரும், நன்னூல்பல எந்நூலாரும் வெஃக இலக்கணமுற்று விளங்கும் அச்சுவாகனத்தேற்றி எச்சமயத்தும், நச்சினார்க்கு நயந்தளிப்பவரும், திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடாலய கர்த்தரும் ஆகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சாமிநாத சுவாமிகளாவார்கள்.

"தேடினு ரியாவரேகொ லெழுவகை யானுஞ் சீர்த்தி
நீடினு ரவரே யென்பர் நீணிலத் துயர்ந்த மாந்தர்
பாடினு ரியாவர் யாவர் பாடுவித் தார்கொ லென்று
நாடினார் தெளியும் வண்ண நவையற நவில லுற்றேன்"

இப்பிரபந்தத்தை நாம் ஆயுமுறையின் வைத்தாய்ந்து மீயுயர் சிறப்பனைத்தும் ஒவறவிருக்கை கண்டு உள்ளத்தடங்கா உவகைவெள்ளத்துப் படிந்தாம். இதுவே செந்தமிழ்க்கோர் செவ்விய இருப்பிடம் என்பதும் தெளிந்தாம். முற்றுஞ் செந்தமிழ் நடையிற்செய்யுள் செய்யவெஃகும் எவர்க்கும் இஃதோர் வழிகாட்டியாய் மிளிரும் மாண்பு பாராட்டற்பாலது.

எதுகை, மோனை, தொடை முதலிய செய்யுள் உறுப்பு வனப்புக்களும், ஏனை அலங்காரங்களும்,

சொற்சிறப்பும், பொருட்சிறப்பும், "சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்" முதலிய மாண்பும் எங்கெங்கே பார்ப்பினும் அங்கங்கே உருவெளித் தோற்றமாய் ஒளிர்தலை உற்றுநோக்குவார் தெற்றென வுணர்வராகலான், விரித்தல் மிகையாகலின் வேண்டா. மற்றவைதாம் சிந்தைக்கினிய செவிக்கினிய செய்ய வாய்க்கினிய என்பது சொல்லாமே அமையும். என்னை ? அநுபவத்தால் யார்க்கும் புலனும்; ஆகலான்.


"வருக்கக்கோவை" என்பது அகர முதலாம் எழுத்து வருக்கம் மொழிக்கு முதலாம் எழுத்து முறையே ஒவ்வொரு துறைக்காரிகைப் பாட்டின் முதலினும் அமைத்துப் பாடப்படும் பிரபந்தம். சேர்க்கப்படுதலால் கோவையெனப்பட்டது. கட்டப் படுதலாற் பிரபந்தமெனப்பட்டது. ஆகலான் அவைகாரணப் பெயர்கள். 'பிர' கிரந்தத்தினுருபசர்க்கம். அது அடைமொழி. பந்தம்-கட்டு.

கோவை அகத்திணைப்பொருளைத் தன்னகத் தடக்கி இல்லறத்திற் கேதுவாய் உலக வின்பம் துய்ப்பிப்பதொரு படிமுறை நூலாயினும் போகந் தீர்ந்துழியே மோக்கமாகலின், அம் முறையானே உலகங் கடந்த இன்பத்திற்கும் காரணமாமாறு உய்த்துணர்க.

திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளாகிய ஆலவா யழுனிறத் திறைவனார் தாம் தம் பெயர் நிறுவி

அருளிச்செய்த இறையனாரகப்பொருளை, "களவியல், கற்பியல்" என இரு பகுதித்தாய்க் கூறியருளியதூஉம் அக்கருத்துப் பற்றியே என்க. கற்பிற்குக் களவு காரணமாகலின், அதனையேமுன்னர் நிறீஇக் "களவியல்" என அந்நூற்கு மற்றொரு நாமமுமாகக்கொண்டனர் அவ்விறையனாரென்றுணர்க.

இறையனார் தாமியற்றிய, "களவியல்" என்னும் அகப்பொருளிலக்கணத்திற்கு ஓரகப்பொருளிலக்கியம் வேண்டப் பட்டமையின், அஃதியற்றற்குரியார், "ஐம்புலன்கையிகந் தறிவாயறியாச் செம்புலச் செல்வர்" ஆகலின் அத்தகையிற் சீரிய அரதனவாக்ய அடிகளைக்கொண்டு அதனை இயற்றுவித்தருளினார். அதன்கண்ணும் இறையனாரகப் பொருளுக்கியையக் களவியலும், கற்பியலும் படிமுறை நிரனிறை விரவியிருத்தல் காண்க.



# பாயிரம்

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், மகாமகோபாத்தியாய பண்டிதமணி, திரு. மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் எழுதிய அபிப்பிராயமும் சாற்றுக்கவியும்.

தாங்கள்பாடிய "ஸ்ரீ மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவையைப்", படித்துப் பார்த்தேன். தங்களுக்கு இயல்பாக அமைந்த பாட்டுவளம் மனத்தை யின்புறுத்தியது; சொற்பொருளழகுகள் மிக்கு விளங்குகின்றன; பண்டையோர் முறை பற்றிய அகப்பொருள் பாடும் ஒழுங்கு சிறந்துளது. தங்கள் அரிய கவித்துவவியல்பை நன்குணர்ந்து மிக்க மகிழ்ச்சியடைந்து அதற்கறிகுறியாக மூன்று வெண்பாக்கள் சிறப்புக்கவிகளாக எழுதி அனுப்பியுள்ளேன். என்பாட்டு வெள்ளையாயினும் தங்களன்பினால் அழகைப்பெற்று இன்புறுத்தும் என்னும் துணிவுடையேன்.

செல்வமலி கூடல் திகழ்சொக்க நாதர்க்கு
நல்வருக்கக் கோவை நவின்றணிந்தான் — கல்விப்
பொருளளித்து மாணவரைப் பொன்றாப் புகழ்சால்
தெருளளிக்கும் நல்லசிவன் தேர்ந்து.

சொல்லும் பொருளும் தொடையும் இசைமுதல
எல்லா நலனும் இனிதமைய — நல்லசிவன்
பாடுங் கவியிற் பயன்பெரிதோ மேற்புலவர்
நாடும் அவியின் நலம்.

காண்புலவர் நெஞ்சகத்தும் கற்பவர் நாவகத்தும்
மாண்புறவுற் றெஞ்ஞான்றும் வாழியரோ-நீணிலத்து
நல்வருக்கம் பாராட்டு நல்லசிவ ஞங்கவிஞன்
சொல்வருக்கக் கோவைத் துறை.

---

## பாயிரம்

ராவ்சாகிப் முதுபெரும்புலவர் திரு. வெ ப. சுப்பிர மணிய முதலியாரவர்கள் G. B. V. C. எழுதிய அபிப்பி ராயமும், சாற்றுக்கவியும்.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலைப் போத காசிரியர் திருவாளர் நல்லசிவன் பிள்ளையவர்கள் மதுரைச் சொக்கநாத சுவாமிமீது பாடியுள்ள அக்கர வருக்கக்கோவையை அவருடனிருந்தும், தனித்தும் படித்துப்பார்த்து மகிழ்வுற்றேன். அதனை வாசிப்போர், அதனில் அவரியற்றும் எல்லாப் பாட்டுக்களிலும் இயல்பாகக் காணப்படும் இனிய தொடைநயம், எளிய நடைநயம், சொன்னயம், தொனிநயம் முதலிய பன்னயங்களையுங் கண்டு பாராட்டுவார்களென்று கருதுகின்றேன்.

எத்திக்கும் போற்ற எழுத்துவருக் கக்கோவை
தித்திக்குந் தேனும் செழுங்கனியும்-ஒத்ததென
நல்லமது ரைச்சொக்க நாதர்மேல் நன்கிசைத்தான்
நல்லசிவ நாமகவி ஞன்.

---

சிவமயம்.

# மதிப்புரை.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தலைமைத் தமிழாசிரியராக இருந்தவர்களும், இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்களாக இருந்தவர்களுமாகிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமி விபுலாநந்தர் அவர்கள்** எழுதியது.

அன்புநிறைந்த உளத்தினராகிய நல்ல சிவனார் வகுத்த இந்நூல் தெள்ளத்தெளிந்த நடையினதாகிச் சிந்தைக்கினிமை பயக்குஞ் செவ்வி வாய்ந்தது. ஆலவாயமலனடியிணைக்குச் சூட்டிய அணிமலர்மாலைபோன்று தமிழ்மணங்கமழ்வது. இதனைச் செய்தோரும் செய்வித்தோரும் புகழுக்குரியராயினார்; இது தமிழுக்குரியதாயிற்று; தமிழ்மொழிக்குச் சிறப்பாகிய அகத்திணை மேலதாதலின்.

அகத்திணையென்பது "காதலிருவர் கருத்து ஒப்ப ஆதரவுபட்ட" அன்பொழுக்கம். ஈதலின்பம் அறத்துக்கு அணிகலமாயினவாறுபோலக் காதலின்பம் கவிதைக்கு அணிகலமாய்த் திகழ்வது. உலகினை நிலைபெறச்செய்வது காதல். உயர்குணமனைத்துந் தோன்றுவதற்கு நிலைக்களமாயது உண்மைக்காதல்.

"ஊக்கம் உறுதி உவகை ஒண்மை
ஆக்கம் வண்மை அறிவு நிறையுடைமை
என்றிவை யனைத்தும் இனையன பலவும்
ஏதமில் காதலி னியைந்தன அதனுல்.
ஐந்திணை நெறியெனும் அன்பொழுக்கத்தினை"

நான்மாடக்கூடலி லிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப்புலவர் பெருகப்பாடி உவகை கூட்டினர். ஒருவனுக்கும் ஒருத்திக்கு மிடையேயுள்ள அன்பு இறைவனுக்கும்உயிருக்கும் இடையேயுள்ள தொடர்பினை நிகர்த்த தென்பார் யோகநூலார். ஒவாவின்பத் தொண்ணிதிச் செல்வராகிய வாதவூரடிகள் பாவைபாடிய வாயாற் கோவைபாடினுர். ஔவைப்பிராட்டியார் அசதிக்கோவைபாடினுர். மதுரைச் சொக்கநாதரைப் பாடிய இவ்வருக்கக்கோவை முன்னோர்நூலே போன்று தமிழ்மொழி வாணர்க்கினிமைபயந்து என்றும் நின்று நிலவுவதாக.

---

## மதிப்புரை

மதுரைப் பிரபல வழக்கறிஞரும், அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியரும், மதுரைத் தமிழ்ச் சங்கக்கௌரவ காரியதரிசியவர்களுமான நாவலர் **ஸ்ரீமாந் சோமசுந்தர பாரதி** எம். ஏ. பி. எல்., அவர்கள் (30-11-1943) எழுதியது:-

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலைப் போதகாசிரியரும் நற்றமிழ்ப் பாவலருமான திருவாளர்

நல்லசிவன் பிள்ளையவர்கள் இயற்றிய "சொக்கநாதர் வருக்கக்கோவை" யைப் படிப்பவர் பாராட்டுவார். இவ்வியற்றமிழாசிரியருக்குக் கவித்துவம் இயல்பமைவுடைமைக்கு இவ்வினியநூலே போதிய சான்றாகும்.

இச் சொக்கநாதர் கோவைச் செய்யுள்கள் சொக்கப் பொன்னீர்மைய; உருகு பொன்றொழுக்கும் இறுகு பொன்றொளியுமொருங்குடைய. துறை நலத்தூய்மைபேணி, நடைநலமும் தொடையழகும் படைத்துடைய. நல்லகருத்துக்களை மெல்லெனோசையிற் செல்லுந்தொடராற் றெளிவோடினிமைதர விளக்குஞ் செவ்வியுடைய. இப்பனுவல், இதனையாக்கியவர் மதிநுட்பம் நூலோடுடைய ரென்பதையும், இயற்புலமை வாய்ந்தவரென்பதையும் தெளிவாக்குகிறது.

இதனைப் பாடுவித்த திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துக்கர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சாமிநாத சுவாமிகளின் தமிழார்வமும், சொக்கநாதர்பால் அவர்கட்குள்ள பேரன்பும் இக்கோவை நின்றுநிலவ என்று மிலகும். பாவாணர் அருகிய இக்காலத்தில் பிள்ளையவர்களைத் தூண்டிக் கோவை பாடுவித்த சுவாமிகள், இன்னுமிப் புலவரையும் இவர்போன்ற பிறரையும் ஊக்கி உளங்கனிவித்துத் தமிழ்வளம் வளர்ப்பதே அவர்கள் பதவிக்கும் நிலைமைக்கும் சாலச் சிறப்புரிமை நிறுவுவதாகும்.

# மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவை

## காப்பு

நாடும் பரம்பொரு ளாமது ரைச்சொக்க நாதர்சரண்
நீடும் வருக்கத் தொடையாற் புனைய நெறித்தமிழிற்
பாடுந் திறன்தந்து முன்னிற்கு நித்தம் பணிபவர்க்கு
வீடுந் தருஞ்சித்தி வேழத்தின் பாத மிளிர்மலரே.

## கைக்கிளை

### 1. காட்சி

அணியா ரரவிந்தந் தண்காவி பூங்குமி ழார்ந்தலர்ந்து
மணியாருங் கோங்க மரும்பிச் செங் காந்தள் மலர்ந்து செம்பொற்
பணியாரம் பூண்மது ரைச்சொக்க நாதர் பனிமலயத்
தினியார நன்பொழி லூடொரு வல்லி திகழ்கின்றதே.

### 2. ஐயம்

ஆனே றடர்த்தெழில் நப்பின்னை தோள்மணந் தானுலகோ?
வானேறு வச்சிர வேந்துல கோ? பணி வாழுலகோ?
மானேறு கைம்மது ரைச்சொக்க நாதர் மணிவரைமேல்
தேனே றுருவத் திவணின்ற பெண்கொடி சேரிடமே.

## 3. துணிவு

இந்தார் நுதலித் திலமரும் பிக்கண் இமைத்தனதண்
பைந்தார் புலர்ந்தன சீறடி தோய்ந்தன பாரகத்து
நந்தார் வயல்மது ரைச்சொக்க நாதர் நளிர்வரைமேற்
கொந்தார் குழலி மடமா தணங்கல்லள் கொள்கநெஞ்சே.

## 4. குறிப்பறிதல்

ஈரா றெறுழிப் பறழ்பா லருத்தி இனிதெடுத்து
நேரா று செல்லு மமைச்சாக்கி யாடல்செய் நித்தர்வைகைப்
பேரா று சேர்மது ரைச்சொக்க நாதர் பெருங்கிரிவாய்
ஆரா வமுத மிவளேக்க மென்னுடை யாருயிர்க்கே.

## 5. இரந்துபின்னிற்றற்கெண்ணல்

உரப்பா லருணிறைந் தாரென் பதுங்கண் ணுணர்த்து மெதுங்
கரப்பா ரலரென் பதுங்கவின் காட்டுஞ்செங் கையிவர்பாற்
சிரப்பான் மதிமது ரைச்சொக்க நாதர் செழுஞ்சிலம்பின்
இரப்பான் புகினமக் கேருடைத் தாமென் றிணங்குதுமே.

## 6. இரந்து பின்னிலை நிற்றல்

ஊசற் கயிற்றிற் சுழலுமென் னெஞ்சத்தி னூறியநின்
ஆசைக் கடலிலென் னுருயிர் மூழ்க லறிந்துவைத்து
நேசற் கருண்மது ரைச்சொக்க நாதர் நெடுங்கிரியில்
நீசற் றிரங்கிலை யிதோகின் தண்ணளி நேரிழையே.

## 7. முன்னிலையாக்கி மொழிதல்

என்னை சுனைபடி யீர்மலர்க் கொய்கிலி ரின்பமிக்க
நன்னேய ஆயமோ டாடலிர் யாது நயந்திலர்போல்
மின்னேர் சடைமது ரைச்சொக்க நாதர் மிளிர்சிலம்பிற்
பொன்னே ரெழிலணங் கீர்நின்ற வாறு புகலுமினே.

## 8. மெய்தொட்டுப் பயிறல்

ஏதா மிடைக்கீ றெனவுணரீர் இவ்விளஞ் சிறுமான்
யாதாறு காலொன்றுஞ் சென்னியின் மீக்கொள வன்மை யளோ?
மீதாறு சேர்மது ரைச்சொக்க நாதர் விலங்கலிடைப்
போதார் மதுகரங் காள்மறந் திர்பிறர் புன்கணையே.

## 9. முறுவற் குறிப்புணர்தல்

ஐயம்பு கொண்டவன் போர்க்கோடை நீத்தென் அகங் குளிரப்
பெய்யம் புதத்தின்முற் றோன்றுமின்போன் றுபிறங்கியதால்
வையம் புகழ்மது ரைச்சொக்க நாதர் மலயவெற்பிற்
செய்யம் புயமன்ன கையாள்வெண் மூரற் சிறுநகையே.

## 10. புணர்ச்சியின் மகிழ்தல்

ஓத்தவின் பத்துயி ரொன்று யியைந்தமு தூறியுள் தித்
தித்தலி னந்தமில் பேரின்ப மீதே சிறந்ததென்பேன்
தொத்தலர் காமது ரைச்சொக்க நாதர் சுரும்பகத்தே
மூத்தன மூரற் குறுநகை யாரின் முயக்கமதே.

## 11. ஊழ்ச்சிறப்புரைத்தல்

ஓங்குந் தமிழ்மது ரைச்சொக்க நாத ருயர்வரைமேல்
தாங்கும் புயற்குழற் றையலிம் மானைச் சரோருகத்தின்
நீங்குந் திருவை நிகரற்ற இன்பினை நீணிலத்தில்
தேங்கு மமிழ்தையெற் கீந்ததெய் வத்திறன் சீர்த்ததுவே.

## 12. அணிகுலைய நாணியதுணர்ந்து தெளிவித்தல்

ஒளவிய நீத்தநன் னெஞ்சணங் கேநின தாகமெல்லாம்
செவ்விய லாமணி முன்போ லணிந்தனன் சிந்தைநையேல்
திவ்விய மாமது ரைச்சொக்க நாதர் திகழ்பொருப்பில்
எவ்விய லாலுநிற் கண்டையு ருர்நின் இகுளையரே.

## 13. இடமணித்தென்றல்

கண்டன்ன சொற்றிரு வேநுங் குறிஞ்சியிற் கள்ளருந்து
வண்டென் னரும்பதி வாவியம் போருகம் வந்துறங்கல்
உண்டென்ன வென்மது ரைச்சொக்க நாதர்வெற் பொண்
மயிலே
ஆண்டென்ன தூர்நின் சிறுகுடிக் கண்மை யறிகுவையே.

## 14. தலைவன் பிரிந்து வருவேனென்றல்

காந்தளந் தண்குறிஞ் சித்தேன் பருகிக் களிவண்டுபோய்
மாந்துளங் கொண்டு வராமையுண் டேநின்கண் வைத்த
நெஞ்சாற்
பாந்தளம் பூண்மது ரைச்சொக்க நாதர் பருவரைமேல்
ஏந்திளங் கொங்கைநல் லாய்பிரிந் தேகணத் தெய்துவனே.

## 15. தலைவன் பிரிவுநினைந்து தலைவி யிரங்கல்

கிஞ்சுக வாயமிழ் துண்டெனக் கின்சொற் கிளந்துகொஞ்சும்
அஞ்சுக மேநினை யோர்கண மேனு மகலுகிலேன்
நஞ்சுகந் துண்டருள் நம்மது ரைச்சொக்க நாதர்வெற்பில்
நெஞ்சுகந் தேயுறை யென்றூர் பிரிய நினைந்தனரே.

## 16. ஆயத்துய்த்தல்

கீதங் கமழுங் குயின்மொழி யாய்இக் கிளர்புனத்தே
நீதங் கிடாதுன் னுயிர்ப்பாங்கி யோடுநன் னேயமிக்க
மாதங்க மாமது ரைச்சொக்க நாதர் வரையகத்தே
ஆதங்க மின்றிநின் ஆயத் துடன்விளை யாடுகவே.

## 17. தலைவன் பாங்கனைச் சார்தல்

குஞ்சரங் காத்தவன் கண்மலர் சாத்துங் குளிர்ந்தலர்ந்த
செஞ்சரண் சேர்மது ரைச்சொக்க நாதர் சிலம்பினில்வேள்
வெஞ்சரம் பாய்புண்ணை யாற்றும் மருத்துவன் மெய்யன்பினென்
விஞ்சர ணன்னவொர் பாங்கனுண் டாலுள்ளம் விள்ளுதற்கே.

## 18. பாங்கன் தலைவனை யுற்றது வினாதல்

கூர்வேற் குமரனை யொத்தமன் னாஇக் குவலயத்துன்
போர்வேற் பகைவரை மாறடு கொற்றப் புயமலைகள்
சீர்வே லணிமது ரைச்சொக்க நாதர் திருவரையில்
சூர்வேறு தீண்டிய போலொளி தேய்ந்து சுருங்கலென்னே.

## 19. தலைவன் உற்றதுரைத்தல்

கெண்டையங் கண்கள்கொண் டென்னுள்ள மீனங் கெடுத்
தருந்தித்
தொண்டையம் வாய்ப்புன் முறுவல் நிலவிலென் றுன்
மதியுண்
டிண்டையிந் தார்மது ரைச்சொக்க நாத ரெழில்வரைவாழ்
ஒண்டைய லாள்தன வெற்பென் புயவெற் புடைத்தனவே.

## 20. பாங்கன் தலைவனைப் பழித்தல்

கேசரி யோபிடி யாற்பிணிப் புண்டிடுங் கேழுழுவை
யோசிறு மானுக் குடைந்திடு மீளிநின் னெண்மதியோ
மாசறு சிர்மது ரைச்சொக்க நாதர் வரைமயிலாப்
பேசறு பேதை குழற்கா ரிருட்குப் பெயர்வதுவே.

## 21. தலைவன் பாங்கனை முனிதல்

கையா வமிழ்த மனையாளைக் கண்டுளங் காதல்கொண்டு
நையா வருந்து மெனையஞ்ச லென்று நலம்புகலாய்
செய்யா வளமது ரைச்சொக்க நாதர் சிலம்பினில்திண்
மெய்யா விழுப்புணில் வேலெறிந் தாங்கு விளம்பினையே.

## 22. இயலிடங் கேட்டல்

கொற்றத் தனிச்சிலை யாய்நின் னுளத்தினைக் கொள்ளைகொண்ட
கற்றைக் குழற்சிறு மானுக் கிடம்பாற் கடல்மலரோ?
நெற்றிக்க ணார்மது ரைச்சொக்க நாதர் நெடுங்கிரியோ?
மற்றெத் தகைத்தோ இயலிறை வாபுகல் வாயெனக்கே.

## 23. இவ்வியலிவ்விடமென்றல்

கோடாத வுள்ளத்தெ னண்பா முகமதி கூந்தல்விசும்
போடாத மேகம் விழியோ கயல்கள் உருவமிழ்தம்
வாடாத தார்மது ரைச்சொக்க நாதர் வளர்பொருப்பில்
தேடா தகப்பட்ட செல்வமன் னுட்கிடந் தேம்பொழிலே.

## 24. பாங்கன் இறைவனைத் தேற்றல்

கௌவையில் லாதமன் னுநினைக் கண்வலைக் கட்படுத்த
அவ்விய லானையின் னேசென்று கண்டுனை யண்ணும்வரை
நவ்வியொர் பாகத்தர் மாமது ரைச்சொக்க நாதர்வெற்பிற்
செவ்விய வுள்ளந் தெளிந்தே யுறைதி திகைப்பொழிந்தே.

## 25. பாங்கன் தலைவியைக் காண்டல்

சந்தங் கமழுந் தடங்காவு மீதே தரைக்கிறையைக்
கந்தங் கமழ்குழ லாற்பிணித் தாளுமிக் காரிகையே
பந்தந் தவிர்மது ரைச்சொக்க நாதர் பசும்பொன்வெற்பில்
நந்தம் முயிர்தள ராதுகண் டோமிங்கு நல்நெஞ்சமே.

## 26. இகழ்ந்ததற் கிரங்கல்

சாத்திரங் கற்றுச் சகமே வெறுத்த தவத்தினரும்
கேத்திரஞ் சூழ்மது ரைச்சொக்க நாதர் கிரியிலிம்மான்
நேத்திரத் தாற்பிணிப் பெய்துவ ரேயிவள் நேர்நகிலாம்
ஏத்திரத் தானொந்த வேந்தையெண் ணுதென்
இகழ்ந்தனனே.

## 27. பாங்கன் தலைவனை வியத்தல்

சிலைவேளுங் கண்டு திகைக்கு நற்பேரெழிற் சீருடன்மூ
விலைவேலர் மாமது ரைச்சொக்க நாதர் வியன்கிரிவாழ்
அலைவேலை யங்கணிப் பெண்ணு ரமுதி னமுதெனுநீர்
நிலைவேலை நீந்திவந் தான்வீர னெம்மிறை நீணிலத்தே.

## 28. பாங்கன் தலைவியை வியத்தல்

சீர்தங்கு கற்பக நாட்டிறை வன்பழி தீர்த்தருளிப்
பேர்தங்கு மாமது ரைச்சொக்க நாதர் பிறங்கலிடை
ஏர்தங்கு மாமயில் போல்வார்நங் கோன்வே ளிரும்பிணிக்கு
வார்தங்கு பூண்வரை யாலருள் வார்நல்ல மாமருந்தே.

## 29. பாங்கன் தலைவனுக்குத் தலைவிநிலைகூறல்

சுடரா தவஞ்செல வொல்லாத சோலையிற் றோய்ந்தகன்ற
கடவா ரணத்தினை யுன்னிவை வேற்றடங் கண்பரப்பி
நடவா ரணப்பரி யார்மது ரைச்சொக்க நாதர்வெற்பில்
மடவா ரணப்பிடி யொன்றுமன் னக்கண்டேன் மன்னவனே

## 30. தலைவன் குறிவழிச்சேறல்

சூதொன்று கொங்கையைத் துய்ப்பா னவளுறை சூழல்செல்லப்
பாதங்கள் பெற்றுப் பிறந்தன மேயன்றிப் பாரிலுளோர்
ஏதங்கள் தீர்மது ரைச்சொக்க நாதர் எழிலிவெற்பின்
மீதொன்று வான்சிறை பெற்றில மேவல்லை மேவுதற்கே.

## 31. தலைவன் தலைவியைக் காண்டல்

செவ்வா யமிழ்தும் திகழ்முத்த மூரலும் திங்கரும்பும்
ஒவ்வா மொழியு முயர்மயிற் சாயலும் உற்றமின்னுள்
தெவ்வா னதின்மது ரைச்சொக்க நாதர் செழுஞ்சிலம்பின்
இவ்வா யிருந்தன ளோர்தனி யானுயிர் எய்திடவே.

## 32. தலைவன் கலவியின் மகிழ்தல்

சேணு ரமிழ்துண்ட தேவரும் என்னிற் சிறந்திலரே
பூணார் தனம்புல்லி வாயமிழ் துண்டிவள் போகந்துய்த்து
நீணுகம் பூண்மது ரைச்சொக்க நாதர் நெடுவரையில்
ஏணு ரகமும் புறமுமள் ளூறியின் பெய்தலினே.

## 33. தலைவன் தலைவியைப் புகழ்தல்

சைவல நீருள் ஒளித்ததும் வேல்குகற் சார்ந்ததும்கார்
மைவரை வேயு மடப்பிடி யுஞ்சென்று வைகியதும்
தெய்விக மார்மது ரைச்சொக்க நாதர் செழுங்கிரியில்
ஐவகை யாநின் குழல்விழி தோள்நடைக் கஞ்சியன்றே.

## 34. பாங்கியொடுவருகெனப் பகர்தல்

சொற்றிடு வேனென் றினிவரும் போதுநின் தோழியுடன்
மற்றிவண் வாமது ரைச்சொக்க நாதர் வரையகத்தே
கற்றிடு வோர்தங் கலையெல் லாமிரு கண்வலையாற்
பற்றிடு பேரெழில் கொண்டுறை கின்றநற் பைங்கொடியே.

## 35. தலைமகளைத் தலைமகன் விடுத்தல்

சோலைப் பசுங்கிளி யேபல தாரகை சூழ்ந்திலகப்
பாலைப் பொருவு பனிக்கதிர் நாப்பண் பயில்வதுபோல்
மாலைப் பெறுமது ரைச்சொக்க நாதர் மலயவெற்பில்
வேலைப் பொருவிழி யாராயம் இன்புற மேவுகவே.

## 36. பாங்கி ஐயமுற்று வினவல்

சௌந்தர பாண்டிய னாகித் தடாதகை தந்தவர
சுவந்துறு மாமது ரைச்சொக்க நாத ருயர்வரைமேல்
தவந்தர வந்தபொலங்கொடி யேதண் தழைகள்கொய்தோ?
நவந்தரு வண்ட லயர்ந்தோ? பொன் மேனி நலிந்ததுவே.

## 37. குறையுற்று நிற்றல்

நயந்தரு சொல்லீர் பணியீர்நங் கூந்தல் நறுங்குறிஞ்சி
வியந்தரு நன்மலர் கொண்டணி கோதினை விற்றிடுகோ
பயந்தரும் ஐவனம் வித்திடு கோநும் பணிபுரிகோ
சயந்தரு மாமது ரைச்சொக்க நாதர் தடங்கிரிக்கே.

## 38. அவன்குறிப்பு அறிதல்

ஞாலத் திறைவனென் னொன்றுடைத் தேயதை நங்கையிவள்
நூலொத்த நுண்ணிடை நோக்கிக் குயவரை நோக்கிநின்று
வேலொத்த கட்கடைப் பார்வையு நோக்கும் விழையக்கண்டேன்
சீலத்தர் வாழ்மது ரைச்சொக்க நாதர் சிலம்பகத்தே.

## 39. அவள்குறிப்பு அறிதல்

ஞெரிகுழற் பாவை யிறைமுக நோக்கு நெடிதவன்றன்
புரிவிழி நோக்கிற் புவிநோக்கி யுண்ணகும் பூதலத்திற்
பரிவுடன் நாரைக்கு முத்திதந் தாண்ட பரமன்மலர்
விரிகயஞ் சூழ்மது ரைச்சொக்க நாதர் விலங்கலிலே.

## 40. தலைவி சுனையாடியதுரைத்தல்

ஞொள்கலில் லாயுனை யான்விட்ட கன்றெருரு நுண்பொ
ழில்வாய்ப்
புள்கலென் றுஞ்சுனை யாடியங் காந்தளின் போதுகொய்து
தெள்கலுள் ளார்மது ரைச்சொக்க நாதர் திகிரியினில்
எள்கலில் லாதுனை வந்தடைந் தேன்ஐய மெண்ணலையே.

## 41. சுனைவியந்துரைத்தல்

தந்தக் குறிகள் குமுதங் குலாவத் தனிப்பிறைபோற்
சந்தத் தரும்பிய கோங்கி னகக்குறி தான்தருமேல்
நந்தத் தனுந்தொழு மாமது ரைச்சொக்க நாதர்வெற்பின்
அந்தச் சுனைபடிந் தாடற் கியானு மவாவுவனே.

## 42. பிறைதொழுகென்றல்

தாரா கணத்தி னடுவுற் றிலங்குமித் தண்பிறையை
நேராகக் கண்டு வணங்குதல் கன்னியர் நீணெறியே
நீரார் முடிமது ரைச்சொக்க நாதர் நிலாவரையில்
ஆரா அமுதனை யாய்செங்கை கூப்புதி அம்புலிக்கே.

## 43. கலைமான் வினாதல்

திங்கட் கொழுந்தையுங் கங்கைப் புனலையுஞ் சென்னிவைத்த
துங்கப் பிரான்மது ரைச்சொக்க நாதர் சுரும்பிலென்கைப்
புங்கத் தொடைபட்ட புண்ணொடும் ஓர்கலை போந்ததுண்டோ?
அங்கட் கயலிணை யீரறி வீரேல் அறைமின்களே.

## 44. பாங்கி தலைவியைக் கொடுஞ்சொற்கூறல்

தீராத காமத் தழலுட னீண்டுத் திகைத்துநின்று
வாராத மானிங்கு வந்ததுண் டோவென்பர் மற்றிவர்யார்
பேராத சீர்மது ரைச்சொக்க நாதர் பெருவரையில்
தாராத தென்விடை யெம்பெரு மாட்டி தழைத்துளமே.

## 45. தலைவி பாங்கியைக் கொடுஞ்சொற்கூறல்

துன்னார் உரந்தெறுஞ் சூர்விழி துன்னிய சுந்தரியே
என்னா ருயிர்த்துணை யாயக லாம விருந்துமெனைத்
தென்னார் பொழில்மது ரைச்சொக்க நாதர் செழுஞ்சிலம்பில்
இன்னா தளபகர்ந் தாயுனைப் போல்தெவ்வர் யாரெனக்கே.

## 46. வேழம் வினாதல்

தூங்குங்கை வாரண மொன்றென் கணைதைத்துச் சோரியுடன்
ஈங்கின்று வந்ததுண் டோவந்த துண்டெனில் எற்குரைப்பீர்
தாங்கும் புகழ்மது ரைச்சொக்க நாதர் தடங்கிரிவாழ்
வாங்குஞ் சிலைநுதல் மாமதி யானன மங்கையரே.

## 47. பாங்கி எதிர்மொழிகொடுத்தல்

தென்னன் மலையத் துவசன் மகத்தினிற் செம்பொன்மலை
மன்னன் புதல்வி தடாதகைப் பேருடன் வந்துதித்து
மன்னும் புகழ்மது ரைச்சொக்க நாதர் வரைப்புனத்தில்
தன்னந் தனிவரக் கண்டிலம் யாம்கலை தந்தியுமே.

## 48. பதி வினாதல்

தேசந் துதிமது ரைச்சொக்க நாதர் சிலம்பினினீர்
வாசம் பெறும்பதி யீதென்றென் மாட்டு வழங்கலிரென்
நேசம் பெறுபவர் கூறுவ ரோபழி நெஞ்சிகழ்ந்து
பேசம் பரமும் பிறங்கலுஞ் சூழும் பெருநிலத்தே.

## 49. பெயர் வினாதல்

தையல்மெய் யார்மது ரைச்சொக்க நாதர் தடவரையில்
மையல்செய் வாள்விழி யீரூர் வினவினன் வாய்திறவீர்
ஐயநும் மூர்புக லீரா யினுமென் அகங்குளிரப்
பொய்யில்சொல் லீர்நும் பெயரேனு மெற்குப் புகலுதிரே.

## 50. மொழிபெற வருந்தல்

தொலைவகல் வான நிதியமிழ் தெய்தினுந் தொல்குலத்தோர்
இலையெனு மாற்றம் புகன்றறி யார்தங்கண் எய்தினர்க்குக்
கலையகல் பல்ல கடாவுய்த்தும் ஓர்விடை கண்டிலனால்
மலையக லாமது ரைச்சொக்க நாதர் வரையணங்கே.

## 51. பாங்கி தலைவனை நகுதல்

தோகைநல் லாய்மது ரைச்சொக்க நாதர் சுவணவெற்பில்
வாகையந் தோளிவ ரம்பெய்த மானின் மாந்தழைகொண்
டேகயி லைப்பெரு மான்கரம் புக்கங் கிருந்ததஞ்சி
ஓகையின் வைகுந்த மொண்புனத் தோடிவ் வுலகும்விட்டே

## 52. பாங்கி தலைவனை அயிர்த்தல்

தௌவையின் பின்வந்த பூமகள் நாயகன் தன்னையொப்பார்
தெவ்வையில் லாவிவர் பித்தினர் போலச் சிலதொடுத்தார்
ஒவ்விய நல்லிடை யும்விடுத் தார்முன் உவரெவர்கொல்
செவ்விய மாமது ரைச்சொக்க நாதர் சிலம்பகத்தே.

## 53. பாங்கி தலைவனைத் தெளிதல்

நற்று ரிதழியர் மாமது ரைச்சொக்க நாதர்வெற்பில்
உற்றோர்ஃக வேழம் விளையது மான்வந்த தோவென் றதும்
சற்றேனு மெய்யன்று தையலர் யார்க்குந் தலைசிறந்த
பொற்றோள் இவள்பொருட் டாலென் றுணர்ந்தனன் புந்தியினே

## 54. குலமுறை கிளத்தி மணம்விலக்கல்

நாவலர் சங்கத் துறைமது ரைச்சொக்க நாதர்வெற்பில்
பூவலர் காவிலிப் புன்குல வேடுவர் பொன்மகளை
மேவலர்க் கோரரி நீமண மார விரும்புவையேல்
காவலர் தங்குலத் திற்கேற்கு மோவிக் கடிமணமே.

## 55. தலைவன் தலைவியை யுயர்த்திக் கூறல்

நிலஞ்சூழ் புலாற்கடல் இப்பிவெண் முத்தினை நீணிலத்தோர்
நலஞ்சூழ் பொருளெனக் கொண்டணி வார்குறை நாடலரால்
தலஞ்சூழ் வுறுமதுரைச்சொக்க நாதர் தடஞ்சிலைவாய்ப்
பொலஞ்சூழ்குறக்குடிக் கோர்மணி யானுரம் பூணனன்றே

## 56. பாங்கி யறியாள்போன்று வினுதல்

நீலந் தரள மரகத முங்கொண்டு நேரிழையார்
சீலந் திகழ்பலர் வீசிடு வார்கவண் தேவருடன்
தாலம் புகழ்மது ரைச்சொக்க நாதர் தடங்கிரிக்கண்
ஏலங் கமழ்குழல் யார்நின் னுளத்தவ ரிங்கிறையே.

## 57. தலைவன் தலைவியின்தன்மை கூறல்

நுண்ணிடை நூலிரு சீறடி தாமரை நோக்கிரண்டு
மண்ணிடை நீல முகமதி தோள்கழை மானுநுதற்
கண்ணுடை யார்மது ரைச்சொக்க நாதர் கருவரையில்
விண்ணிடை யும்பொரு வாரிலை என்னுயிர் மெல்லியற்கே.

## 58. பாங்கி தலைவியருமைசாற்றல்

நூறு மகஞ்செய்த இந்திரன் காவு நுவலரிய
வீறுர் நிதியும் வெள்ளானையும் எய்தினும் வேடர்குலப்
பேறுர் வனிதை பெறற்கரி யாள்கடற் பேருலகில்
நீறுர் புனைமது ரைச்சொக்க நாதர் நெடுவெற்பிலே.

## 59. தலைவன் இன்றியமையாமை இயம்பல்

நெஞ்சத் தெழுகடல் போல்மயல் செய்திட்ட நேரிழையை
மஞ்சத் திருத்தி மருவே னெனிலுயிர் வாழ்வல்கொல்லோ
நஞ்சத் திருமிடற் றூர்மது ரைச்சொக்க நாதர்வெற்பில்
அஞ்சத்தை வென்ற நடையாயென் செய்கை யறிந்துகொள்ளே.

## 60. பாங்கி நின்குறைநீயே சென்றுரையென்றல்

நேரேசென் றுன்குறை நீயே நிகழ்த்துதி நின்னுளத்தைத்
தாரேய் குழலறி வாளவள் உள்ளமுஞ் சார்ந்தறிவாய்
காரேய் பொழில்மது ரைச்சொக்க நாதர் கழைவரையில்
போரேய் புயத்தண்ண லேநின்னை ஈதுசெய் பொற்றொடிக்கே.

## 61. பாங்கி தலைவி பேதைமை பகர்தல்

நையாத செல்வந் தருமது ரைச்சொக்க நாதர்வெற்பில்
பையா டரவென்று பாராது பற்றும் பருவமுறா
செய்யா ளனவிச் சிறுபேதை யாள்பிறை சிந்தையினேய்
ஐயா அறியாத் தகைமைய ளாமென் றறிகுவையே.

## 62. தலைவன் தலைவியின் மூதறிவுரைத்தல்

நொந்தேனை வாழ்விக்கக் கண்ணருள் செய்து நுவல்வதன்
அந்தா மரையை அலர்த்திக் குறுநகை யாலெனுயிர்
தந்தாளை மாமது ரைச்சொக்க நாதர் தடங்கிரியில்
வந்தாளைப் பேதையென் றோதுதி ஈதென்ன மாயமதே.

## 63. பாங்கி முன்னுறு புணர்ச்சிமுறையுறக்கூறல்

நோய்தந்து நோய்க்கு மருந்துந்தந் தாளென்று நுண்ணியநூல்
ஆய்தந்த நீபுகன் றுயன்று போலவ் வகன்பொழிற்கண்
வேய்தந்த தோளியை மேவுதி யார்துணை வேண்டுநிற்குச்
சேய்தந்த மாமது ரைச்சொக்க நாதர் சிலம்பகத்தே.

## 64. பாங்கிக்குத் தலைவன் தன்னிலைமைகூறல்

நௌவியை நேர்விழி யாய்மது ரைச்சொக்க நாதர்வெற்பிற்
கொவ்வையந் தீங்கனி வாயிதழ்ப் பூவையைக் கூடிலனேல்
இவ்வுயிர் வாழ்கிலன் யானுமென் உள்ளமும் என்னுயிரும்
செவ்விய வின்மொழி யாலன்றி எங்ஙன் சிறப்பனவே.

## 65. பாங்கி உலகியலுரைத்து வரைந்துகொள்ளெனல்

பண்டரு பாடல் படைத்தமன் னுகடம் பாடவிசூழ்
தண்டமிழ் மாமது ரைச்சொக்க நாதர் தடஞ்சிலம்பில்
ஒண்டொடி போகம் விரும்புவை யேலுல கோரறிய
எண்டிசை வாழ்த்த எரிசான் றெனமணந் தெய்துகவே.

## 66. தலைவன் வரைவுமறுத்தல்

பாரோர் துதிமது ரைச்சொக்க நாதர் பருவரையில்
காரோதி யைவரைந் தின்புறு வாயெனல் காரிகையே
நீராரும் வேட்கையின் நாப்புலர்ந் தார்க்குநன் னீருடனே
தாரா துறவி யகழ்ந்திகு வோமென்று சாற்றலொப்பே.

## 67. பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்

பிறையேய் நுதலிவட் பெற்றவில் வேடர் பெரியர்பொல்லார்
இறையே இவணகன் றேகுக போதும் இருண்டதினி
நறையேய் பொழில்மது ரைச்சொக்க நாதர் நகுவரைமேல்
முறையே எமருறை சீறூரை யாங்களு மூந்துதுமே.

## 68. தலைவன் மடலைத் தன்மேல்வைத்துச்சாற்றல்

பீடுறு மாமது ரைச்சொக்க நாதர் பெருவரையின்
மாடுறு மாதுநல் வீரென் குறையின்றும் வாய்ப்புகல்வேன்
சூடுறு வேன்நாளை நாளெருக் கோடென்பு சூடியெழில்
தோடுறு பெண்ணை மடலேறி நுங்கண்முன் தோன்றுவனே.

## 69. பாங்கி என்னைமறைப்பிற் கூட்டமரிதெனல்

புவியும் புதுவித்தும் ஒன்றின வேனும் புனலிலதேல்
அவியும் பழுதுறும் அங்கறி யாததை யன்னநுங்கள்
குவியுங் கருத்தொன் றெனினு மொளித்திடிற் கூட்டமின்றாம்
கவியும் பொழில்மது ரைச்சொக்க நாதர் கவின்வரைக்கே.

## 70. நகை பொருது அவன் புலம்பல்

பூழியர் கோன்வெப் பொழித்துநற் சைவம் புகுத்தியநங்
காழியர் கோன்தமிழ் வேதங் கமழுங் கடம்பவனம்
சூழியல் மாமது ரைச்சொக்க நாதர்தஞ் சோதிவெற்பில்
வாழியல் மங்கைகண் வாளினு நின்நகை வாள்கொடிதே.

## 71. பாங்கி தலைவனைத் தேற்றல்

பெண்ணா ரமுதென் மொழிமறுக் காள்மணம் பேசியுனைப்
பண்ணார் மொழியளை யெய்திடச் செய்குவன் பார்த்திபனே
எண்ணா தனவெண்ணி யேக்க முறேலுயிர்க் கின்புசெயுந்
தண்ணார் பொழில்மது ரைச்சொக்க நாதர் தடங்கிரிக்கே.

## 72. பாங்கி தலைவனுக்குக் குறியிடங்கூறல்

பேரோங்கு மாமது ரைச்சொக்க நாதர் பெருவரையில்
நீரோங்கு தண்சுனைப் பாங்கர்தெய் வேந்திர நீணகரிற்
காரோங்கு கற்பகக் காநிகர் சோலையெங் காவலனே
ஏரோங்க யாங்கள் பகல்விளை யாடல் செயுமிடமே.

## 73. பாங்கி குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல்

பைங்காவி னுந்திகழ் வாவியி னுஞ்சுனைப் பாங்கரினும்
கொங்காருங் கோட்டலர் நீர்ப்பூ நிலப்பூக் கொடியின்மலர்
பொங்கார்வத் தோடுகொய் தேவினை யாடிடப் போதுகம்வா
சங்கார் பணைமது ரைச்சொக்க நாதர் தடத்தணங்கே.

## 74. பாங்கி தலைவியைக் குறியிடத்துய்த்து நீங்கல்

பொற்றா மரையுங் கடம்பா டவியும் புனிதமுறப்
பெற்றார் வளமது ரைச்சொக்க நாதர் பிறங்கலின்வாய்க்
கற்றார் புகழிக் கடிமலர்க் காவிற் களித்திருநீ
சற்றே புறஞ்சென் றலர்கொண்டு மீள்வனின் தாழ்குழற்கே.

## 75. நீங்கும் பாங்கி தலைவற்குரைத்தல்

போதா ரெழிற்றிரு நேரெம் இறைவி புரவலநின்
தாதார் மலர்ச்செழுந் தார்தோ யகலந் தனக்குரியள்
காதார் விழியளை நின்னுயி ராகக் கருதுதிசொல்
மாதார் வளமது ரைச்சொக்க நாதர் வரையிடத்தே.

## 76. தலைமகன் தலைவியைக் குறியிடத்தெதிர்ப்படல்

பவளத் திரைதரு முத்தொத்த வெண்ணகைப் பைந்தொடியே
இவ்வெற் பொழுதி லெனக்கெதிர் நீதனி யெய்தியதென்
எவ்வத் தினைத்தவிர்த் தின்னுயி ரீந்திட எண்ணினையோ
தெய்வத் திருமது ரைச்சொக்க நாதர் செழுங்கிரிக்கே.

## 77. புணர்ச்சியின் மகிழ்தல்

மலர்க்காவி னூடிந்த மங்கையற் கீந்த வரம்பிலின்பஞ்
சிலர்க்கேனும் வாய்த்திடு மோஇஃ தியான்முனஞ் செய்தவமே
குலக்கா விரிதொழும் வையையந் தீம்புனல் கோதில்வளன்
நிலக்கார் தருமது ரைச்சொக்க நாதர் நெடுவெற்பிலே.

## 78. இற்கொண்டேகல்

மாதே தினையும் விளைந்தன நம்மவர் வந்துபுன
மீதே குரல்கொய்வர் மற்றிங் கிருப்பதென் வீதிதொறும்
போதே கமழ்மது ரைச்சொக்க நாதர் பொலஞ்சிலம்பில்
ஈதே யிலாநஞ் சிறுகுடிக் கேயினிச் சேறுதுமே.

## 79. பாங்கி யாடிடம்விடுத்துக்கொண்டகறல்

மிடையும் புனக்கிள் ளை காளளி காள் இதண் விட்டெமதில்
அடையும் படிசெலெஞ் சிற்றூர் வழியை யறைந்திடுமின்
விடையுந் தியமது ரைச்சொக்க நாதர் மிளிர்சிலம்பிற்
படையுந்து கைக்கழை வில்லோன் நிகரெங்கள் பார்த்திபற்கே

## 80. தலைவன் வறும்புனம்நோக்கி மான்முதலியவற்றை வினுதல்

மீனோர் விழியும்விண் மின்னோர் இடையும் விரைமலர்ப்பூந்
தேனோர் மொழியுங்கொண் டிங்குநின் றூரெங்குச் சென்றனரோ
மானே கிளியே மயிலே குயிலே வகுத்திடுவீர்
பானேர் விடைமது ரைச்சொக்க நாதர் பருப்பதத்தே.

## 81. இறைவிக்கு அவன்வரவு அறிவுறுத்தல்

மூப்புவ னத்தினு மொப்பே யிலாநினை முன்னியின்று
மைப்பெறு கண்ணிநின் னூர்தேடி வந்தனர் வான்தருவுங்
கைப்பெரு வண்மையைக் கண்டுட் சமழ்க்குநின் காதலன்பர்
மெய்ப்பொரு ளாமது ரைச்சொக்க நாதர்தம் வெற்பகத்தே.

## 82. வண்டுறைதாரான் வந்தெதிர்ப்படுதல்

மூதறி வாரன்னை துஞ்சா திருக்கவும் மொய்யிருளில்
மாதர சேபது மக்கத வந்திற வாதும்வந்து
நீதக வோடிங்கு நிற்கவென் நான்முன் நிகழ்த்துதவம்
மேதகு மாமது ரைச்சொக்க நாதர் விலங்கலிலே.

## 83. தலைமகள் நெறியினதருமைநினைந்திரங்கல்

மெய்க்கா வலுமின்றி வேழமுங் கேழலும் வேங்கையும்சார்
இக்கா னெறிகடந் திங்குவந் தீரென் இயற்றுதவம்
மைக்கார் தவழ்மது ரைச்சொக்க நாதர் வரையிடத்தே
தக்கோர் புகழண்ண லென்பொருட் டோவித் தனிவரவே.

## 84. உடன்போக்கு

மேருவில் லார்மது ரைச்சொக்க நாதர் விலங்கலிற்பொற்
றுருவல் லாலினை யில்லாக் கொடையர்பின் றுயுமற்றும்
யாருமில் லாவுணர் வாய்த்துயில் கங்குலி லேகினள்அல்
காருமல் லாணிக ரில்லாக் கருங்குழற் காரிகையே.

## 85. தலைவன் தலைவியை வரைந்திருத்தல்

மையா ரிரவு புலருமுன் தன்பதி வந்துமறைப்
பொய்யா விதியின் நிறையங்கி முன்பு புவியறியச்
செய்யா ளனையளை மன்றல்செய் தின்பஞ் சிறந்திருந்தான்
செய்யார் வளமது ரைச்சொக்க நாதர் சிலம்பகத்தே.

## 86. வருந்திய செவிலிக்குவழக்குரைத்தல்

மொழிவதென் அன்னை மகளையுண் ஞூடி முழுதும்சிந்தை
அழிவதென் தேன்மல ரெங்கெ பிறப்பினும் ஆர்ந்தணிந்து
கழிமகிழ் வெய்துநர் கையவன் றேகலங் காதுமகிழ்
கொழிதமிழ் மாமது ரைச்சொக்க நாதர் குலகிரிக்கே.

## 87. தலைவி பாங்கிக்குத் தன்னிலையுணர்த்துமெனல்

மோனத் தவருறை கானத் தகன்றெழில் முற்றுமுயர்
வானத் தவர்புகழ் எம்மிறை யூர்நண்ணி யன்றலெய்தி
ஞானத் தவருறை மாமது ரைச்சொக்க நாதர்வெற்பிற்
கோனத்த வாழ்வதைக் கூறீரென் பாங்கிக்குக் கோதையரே.

## 88. தலைவன் பிரிந்தமை பாங்கி தலைவிக்குரைத்தல்

மௌவலங் கோதைநல் லாய்நந் தலைவர் மகபதியின்
தெய்வத வெண்குஞ் சரச்சாபந் தீர்த்தருள் செய்துறுநன்
மைவளர் சீர்மது ரைச்சொக்க நாதர் வரையிடத்தே
ஐவளர் முத்தங் கொணர்வானின் கொங்கைக் ககன்றனரே.

## 89. பிரிவாற்றாமை

யவமுத லாமுண வுப்பொரு ளும்வைகை யாறுதரும்
நவநிதி யும்மிகு மாமது ரைச்சொக்க நாதர்வெற்பில்
தவநிதி போன்றுனை நீங்கேனென் றோது தலைவர்மொழி
அவநிதி போற்பொய்க்கு மென்றோ சொலாதிங் ககன்றதுவே.

## 90. தலைவி கொடுஞ்சொற்கூறல்

யானையை நாகத்தை யெய்தும் நரிபரி யாக்கியுமம்
மானைவெவ் வாய்நரி யாக்கியும் தூய வளைபகர்ந்தும்
கோனென வாழ்மது ரைச்சொக்க நாதர் குளிர்வரையில்
வானமு துங்கைக்கும் பன்னாட் பருகினெம் மன்னவற்கே.

## 91. வரவுணர்பாங்கி தலைவிக்குணர்த்தல்

யுகம்பல கண்ட திருவால வாயென் றுறத்துதித்துச்
சகம்பல சொல்மது ரைச்சொக்க நாதர் தடங்கிரிவாய்ச்
சுகம்பல நல்குநின் தோள்பிரிந் தேகு துணைவர்வந்தார்
பிகம்பல வொல்குமின் சொல்லா யுறுக பெருமகிழ்வே.

## 92. தலைவி பாங்கிக்குத் தன்னிலைதெரித்தல்

யூகம் தவழ்மது ரைச்சொக்க நாதர் உயர்வரைமேல்
ஆகம் பசலை யுறப்பிரிந் தார்நம் மகத்துவந்தால்
மேகம் வரக்கண்ட கேகயம் போற்களி மேவலல்லாற்
சோகம் தருபெரும் ஊடலெவ் வாறுளந் தோன்றுவதே.

## 93. புணர்ச்சியின் மகிழ்தல்

யோகம் பயிலு முனிவோ ருளத்தளி யுற்றுமைக்குப்
பாகந் தருமது ரைச்சொக்க நாதர் பருப்பதத்தின்
மேகந் தரமெனும் ஓதியின் நீந்தஇம் மெய்ந்நலத்தின்
மோகந் தவிர்வதுண் டோபல வூழி முயங்கினுமே.

## 94. தலைவன் பொருள்வயிற் பிரிவு பாங்கிக்குணர்த்தல்

யௌவன மேனிக் கணியவுந் துய்க்கவும் யான்விரைந்து
செவ்வனந் தேடிக் கொணருவல் பொன்பல தேசமும்போய்த்
தைவிக மார்மது ரைச்சொக்க நாதர் தமிழ்வரையில்
இவ்வகை யோதிரு கண்ணுயி ரன்னவின் ஏந்திழைக்கே.

## 95. தலைவன்பிரிவு பாங்கிவிலக்கல்

வரைபுரை யுந்தடந் தோளண்ண லேகி வருவையெனும்
உரைபுகி னெங்ஙன் பொறுக்குங் கொலோவுயி ரோங்குகடல்
தரையுரை மாமது ரைச்சொக்க நாதர் தனிச்சிலம்பில்
திரையுறு பாற்கடல் தோன்றுது வந்தநந் தெள்ளமுதே.

## 96. தலைவன் தன்பிரிவுக்குப் பாங்கியை யுடன்படுத்தல்

வாங்குஞ் சிலைநுத லாளரும் போகம் வழங்கியுயிர்
தாங்கும் படியெனைக் காத்தநல் லாய்உன் றனக்கரிதோ
தேங்கும் புனல்மது ரைச்சொக்க நாதர் சிலம்பகத்தில்
ஓங்கும் பசுங்கழைத் தோளிதுன் பாற்றுத லோர்ந்திடினே.

## 97. பொருள்வயிற் பிரிவு தலைமகனுன் உணர்ந்து தோழி தலைமகளுக்குணர்த்தல்

விட்புல வாணருங் காணுப் பசுபதி மேதினியோர்
கட்புல னுங்கொண்டு கண்டிடு மாறருட் காட்சிதந்த
பெட்புறு மாமது ரைச்சொக்க நாதர் பிறங்கலின்வாய்ப்
பட்புரை சொல்லாய் அகன்றார்பொன் தேடநம் பார்த்திபரே.

## 98. தலைவி இளவேனிற் பருவங்கண்டு வருந்தல்

வீசும் பசுந்தென்ற லான்மாத் தளிர்த்து மிளிருமிந்நாட்
காசும் பசும்பொனுந் தேடப் பிரிந்தநங் காதலன்பர்
ஆசுந் தெரிந்திலர் போலும் புவியின ராற்றகமு
மாசுந் தவிர்மது ரைச்சொக்க நாதர் வரையகத்தே.

## 99. தலைவியை யாற்றுவித்தற்குத் தோழியுரைத்தல்

வென்றிச் சிலைமதன் காகளங் கூவும் வியன்தொனியும்
தென்றற் சிறுகால் இரதத்தி னோதையும் சென்றிசைப்ப
அன்றற் பொடுபொருள் தேடற் ககன்ரு றறிந்துவந்தார்
நன்றுற் றருள்மது ரைச்சொக்க நாதர் நகத்தகத்தே.

## 100. தலைமகன் தலைமகளது உருவெளிப்பாடு கண்டு வருந்தல்

வேலா வலயம் புகழ்சொக்க நாதர் விலங்கலிடை
மாலா னவரு மயல்கொளத் தோன்றுமொர் வல்லியதிற்
பாலேய் வுறுபிறை பூங்குமிழ் தாமரை பைங்குவளை
மேலார் தாளங்கும் என்முனந் தோன்றும் வியப்பிதென்னே.

## 101. தலைவி தலைவன்வரவு எதிர்கொளல்

வையந் துதிக்குநம் மன்னர்வந் தாரென்று வண்மையுறு
கையம் புயத்துறை யேந்திவந் தாள்கடம் பாடவிசூழ்
ஐயம் தமிழ்மது ரைச்சொக்க நாதர் அடுக்கலிடை
மெய்யன்பு பூண்ட விரைமலர்ப் பூங்குழல் மெல்லியலே.

## 102. தலைமகன் கார்ப்பருவங்கண்டு களித்தியம்பல்

வெளவாத் தமிழ்நிதி பொன்னிதி மல்கிமற் றெப்பதியும்
ஒவ்வாத் திருமது ரைச்சொக்க நாதர் ஒளிர்வரைமான்
செவ்வாய் அமுதுண்டு புல்லினம் யாமிவண் செல்லினங்காள்
எவ்வாயு மாரி பொழிந்தூழி வாழி இனியினிதே.

மதுரைச் சொக்கநாதர் வருக்கக்கோவை முற்றிற்று.

சுபம்

மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL

# மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவை.

## குறிப்புரை.

காப்பு:- சித்தி வேழத்தின் பாத மிளிர்மலர் திறன்தந்து முன்னிற்கும், வீடும் தரும் எனக் கூட்டுக. வீடும் என்னும் உம்மை இறந்தது தழீஇயது. பணிபவர்க்குத் தரும் என்றது தன்னைப் பிறர்போற் கூறியதாம், அன்றி இப்பணிபுரிவார் பலரும் நற்பயன் எய்தப் பொதுமையிற் கூறினார் எனினுமாம். வருக்கத்தொடை, அகரமுதலாக மொழிமுதல் எழுத்துக்கள் ஒவ்வொரு கலித்துறைக்கும் முதலாக முறையே வரத் தொடுப்பது. தொடை - மாலை, வேழம் - யானை, ஈண்டு யானைமுகக் கடவுள். மிளிர் - விளங்கு. மலர் - மலரடி, உவமவாகுபெயர்.

1. அரவிந்தம் - தாமரை ஆர்ந்து - பொருந்தி, பணி ஆரம் - உம்மைத்தொகை. மலயம் - மலயமலை என்னும் பொதியில், ஆரநன்பொழில - நற்சந்தனச்சோலை, காவி - குவளை.

2. ஆன் ஏறு அடர்த்து - எழு இடபங்களை அடக்கி, நப்பின்னை - கண்ணன் மனைவி, வச்சிரவேந்து - வச்சிரப் படையுடைய இந்திரன்.

3. இந்து - சந்திரன், நந்து - சங்கு, கொந்து - கொத்து என்பதன் மெலி, சீறடி - சிறுமை அடி, நளிர் - குளிர்.

4. எறுழி - பன்றி, பறழ் - குட்டி, உடையுயிர் - வினைத்தொகை; "சங்கு தருநீணிதியஞ் சாலவுடைநாயகன்" என்புழிப் போல.

5. உரப்பால் - நெஞ்சில், கரப்பார் - மறைப்பர், சிரப்பால் - தலையில், பால் - பக்கம், இரப்பான் - இரக்க.

6. ஊசல் - ஊஞ்சல். தண்ணளி - இன்னருள்.

7. சுனை - தடாகம், படிதல் - மூழ்குதல், ஆயம் - மாதர் கூட்டம்.

8. ஈறு - முடிவு, ஆறுகால் - மதுகரம், வண்டு. விலங்கல் - மலை. புன்கண் - துன்பம், போது - மலரும் பருவத் தரும்பு.

9. ஐ அம்பு கொண்டவன் - மன்மதன், நீத்து - விட்டு, அம்புதம் - மேகம், செய்யம்புயம் - செந்தாமரை. மூரல் - பல்.

10. தித்தித்தல் - இனித்தல், தொத்து - கொத்து, குறுநகை - சிறுநகை' முயக்கம் - சேர்க்கை, சுரும்பு - மலை.

11. சரோருகம் - தாமரை, திறன் - திறம், சீர்த்தது - சிறப்புடையது, இம்மானை என்புழி இகரச் சுட்டைத் திரு முதலிய மூன்றனோடுஞ் சேர்த்துரைத்துக்கொள்க.

12. ஔவியம் - அழுக்காறு, ஆகம் - உடல், நையேல் - வருந்தாதே, இகுளையர் - தோழியர்.

13. 'நின்மனத்துறும் எண்ணினை' என்புழி எண் வருத்தத்தை உணர்த்துமாறுபோல ஈண்டும் எண் அதனை உணர்த்திற்று, அண்மை - சமீபம்.

14, பாந்தள் - பாம்பு, கணம் - பொழுது.

15. கிஞ்சுகவாய் - முருக்கமலர்போன்ற சிவந்த வாய், அஞ்சுகம் - அம்சகம், அழகிய கிளி, உகந்து - விரும்பி.

16. மாதங்கம் - யானை, ஆதங்கம் - துன்பம்.

17. குஞ்சரம் - யானை, (கஜேந்திரன்) வேள் - கருவேளாகிய மன்மதன், விஞ்சரண் - விஞ்சு அரண் - மேலான காவலிடம், விள்ளுதல் - கூறுதல்.

18. மாறடுகொற்றப் புயமலை-பகைமையைக்கெடுத்து வெற்றியை விளைக்கும் தோள்களாகிய மலைகள். சூர்- பொழிற்றெய்வம்.

19. தொல்மதி - பேரறிவு, இண்டையிந்தார் - இண்டைமாலையும் சந்திரனும் பொருந்திய, தனவெற்பு - முலைமலை.

20. கேசரி - சிங்கம், உழுவை - புலி.

21. கையா - கையாத, வெறுக்கப்படாத, விழுப்புண் - மார்பினும் நெற்றியினும் உண்டாம் பெரும்புண், செய்யாச் சொக்கநாதர் - சுயம்புலிங்கமான சொக்கப்பெருமான்.

22. இயல் - இலக்கணம், கொற்றம் - வெற்றி, தனிச் சிலை - ஒப்பற்ற (புருவ) வில்.

23. கோடாத - கோணாத, விசும்பு - விண், தேம்பொழில்- தேன்பொருந்துசோலை.

24. கௌவை - துன்பம், நவ்வி - மான். திகைப்பு - மயக்கம்.

25. சந்தம் - சந்தனம், காரிகை - பெண், பந்தம் - பாசம், வினை.

26. கேத்திரம் - க்ஷேத்திரம், நகில் - முலை, கொங்கை. ஏந்திரம் எத்திரம் என எதுகை நோக்கி வலிந்தது. 'கருப்

பேந்திர முதலாயின கண்டான்' யந்திரம் - எந்திரம் என்றுயிற்று. நகிலாகிய யந்திரம் மனமாகிய கழையை அழுங்கக் கோறலால் நொந்த வேந்தை என்க. விழியினும் நகிலே மிகத் துன்புறுத்தும் உறுப்பு. இக்கருத்துப்பற்றியே 'கோங்கரும்பும் வீழ்த்தென்னையும் ஆட்கொண்டன கொங்கைகளே' என்றார் திருக் கோவையார் ஆசிரியரும்.

27. மூவிலைவேலர் - முத்தலை வேற்படையார், வியன் - பெரிய, அலை வேலையங்கணி - வேலை அலை அம் கணி, வேற்படை களை வருத்தும் அழகிய கண்களையுடையாள், நீர்நிலைவேலை - நீர் நிலையாகிய கடல்.

28. கற்பகாட்டிறைவன் - இந்திரன். பிறங்கல் - மலை, வேளிரும்பிணிக்கு - மன்மதனுலாய பெருநோய்க்கு.

29. ஆதவம் - சூரியன், கடவாரணம் - மதயானை, நட ஆரணப்பரி - நடக்கும் வேதமாகிய குதிரை, மடவாரணப்பிடி - இளம் யானை, ஒன்று மன்னக் கண்டேன் என்பதற்குப் பதில் நிற்பது கண்டனென் என்று படிக்க.

30. சூது ஒன்று - சூதாடு கருவியை ஒத்த, துய்ப்பான் - நுகர. சூழல் - இருக்கை, ஏதங்கள் - குற்றங்கள், எழிலி - மேகம், வல்லை - விரைவு.

31. ஒல்லா - பொருந்தாத, இவ்வாய் - இவ்விடம்.

32. எண் - வலிமை, அள்ளூறி - பெருகி.

33. சைவலம் - பாசி, வேய் - மூங்கில், வைகியது - தங்கியது, ஐவகை - ஐம்பால், ஐந்து பகுப்பு.

34. கலை - கல்வி. கண்வலை - கண்களாகிய வலை (கண்ணி).

35. தாரகை - நட்சத்திரம், பனிக்கதிர் - குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன், நாப்பண் - நடு, மேவுக - பொருந்துக.

36. தடாதகை - மலையத்துவச பாண்டியன் மகளாகத் தோன்றிய இறைவி, நவம் - புதுமை; ஒன்பது, வண்டல் - சிறு பெண்கள் வண்டலம் பாவை செய்து விளையாடல். நலிந்தது - வருத்தியது.

37. ஞயம் - நயம், இனிமை, ஐவனம் - மலைநெல், வித்திடுகோ - விதைப்பேனோ. 'பணியீர் நங்' என்பதைப் 'பணியீர் நுங்' எனப் படிக்க.

38. ஞாலம் - பூமி, குயவரை - தனமலை, விழைய - விரும்ப, சிலம்பகம் - மலையிடம்.

39. ஞெரி - நெரி, யுண்ணகும் - உள்ளே சிரிப்பள், கயம் - தடாகம்.

40. ஞொள்கல் - இளைத்தல், ,புள்கலெனும் - பறவை கல்லென்று ஒலிக்கும், எள்கல் - இகழ்தல்.

41. சந்தம் - சந்தனம், கோங்கின் - கோங்கரும்புபோன்ற கொங்கையில், நந்தத்தன் - பாஞ்சசன்யமென்னும் சங்கைக் கையிற் றாங்கும் திருமால்.

42. அம்புலி - சந்திரன், கூப்புதி - கைகுவிப்பாய்.

43. சுரும்பு - மலை, புங்கம் - உயர்வு, அறைமின் - தெரிவியுங்கள்.

44. போாத - பெயராத, நீங்காத, விடை - மறுமொழி.

45. துன்னார் - துன்றார், நெருங்கார், பகைவர், உரம் தெறும் - வலியைக் கெடுக்கும், தென்னார், தென் என்னும் ஒலி பொருந்திய, அழகுபொருந்திய. தெவ்வர் - பகைவர்.

46. தூங்குங்கை - அசையும் அல்லது தொங்கும் துதிக்கை, ஆனனம் - முகம்,

47. மகம் - வேள்வி, தன்னந்தனி - தனியே, கலை தந்தியும்- மானும் யானையும்.

48. என்மாட்டு - என்னிடம், வழங்கலிர் - பேசுகின்றிலிர், அம்பரம் - ஆகாயம்.

49. எற்குப் புகலுதிர் - எனக்குச் சொல்வீர், தையல் மெய் யார் - உமையொரு கூறுடைய சிவனார்.

50. மாற்றம் - சொல், மலை - மல்லை என்பதன் இடைக் குறை; மல் - பெருமை.

51. சுவணவெற்பு - பொன்மலை, ஓகை - விருப்பம்.

52. தௌவை - மூத்தவள்; மூதேவி, ஒவ்விய - பொருத்த மான, உவர் - அவரும் இவருமல்லாத மூன்றுமிடத்தவர்.

53. இதழி - கொன்றை, பொருட்டு - நிமித்தம்.

54. மேவலர்க்கு ஓர் அரி - பகைவர்களாகிய யானைகட்கு ஒப்பற்ற சிங்கம் போன்றவன், காவலர் - அரசர்.

55. இப்பி - நத்தை, சங்கு, பூணல் - தரித்தல்.

56, தாளம் - முத்து, கவண் - கல்லெறி கருவி, தாலம் - பூமி. குழல் - கூந்தலையுடையாள், அன்மொழித்தொகை.

57. நீலம் - நீலோற்பலமலர், கழை மானும் - மூங்கிலை ஒக்கும். கருவரை - பெரிய மலை, பொருவர் - ஒப்பார்.

58. கா - சோலை. நுவலரிய வீறு ஆர் - சொல்லுதற்கரிய சிறப்பு அமைந்த, வீறு - மற்றொன்றிற்கில்லாப் பெருமை. கிடைத்தற்கரிய கற்பகக்கா முதலியன ஒருகாற் கிடைப்பினுங் கிடைக்கும். குறமகள் கிடைத்தற்கரியள், வேற்றுச் சாதியாரால் கா முதலியன சீதளமாக வரப்பெறினும் குறமகள் அவர்க்கு மண மகளாதல் அரிது. இங்ஙனம் இருபொருள் கொள்க.

59. மயல் - ஆசை, மஞ்சம் - கட்டில், வாழ்வல் கொல் - வாழேன், மிடறு - கழுத்து, அஞ்சத்தை - அன்னத்தை.

60. நிகழ்த்துதி - தெரிவிப்பாய், தார் எய் - மாலை பொருந்திய.

61. நையாத - அழியாத, பை ஆடு அரவு - படமெடுத்து ஆடுகின்ற பாம்பு. பிறை என்பதைப் பிறர் என்று படிக்க.

62. வதன அந்தாமரையை - முகமாகிய அழகிய தாமரை மலரை, அலர்த்தி - அலரச்செய்து.

63. முதலடியில் 'இருநோக் கிவள் உண்கண் உள்ள தொரு நோக்கு நோய்நோக்கொன் றந்நோய் மருந்து' என்ற குறட் பொருள் அமைந்துள்ளது. சேய் - முருகன்.

64. நௌவி - நவ்வி, மான். பூவை-நாகணவாய்ச் சொல்லு டையவள்.

65. எரி சான்று என - நெருப்பு சாட்சியாக, பண் - இசை.

66. ஓதி - கூந்தல், வரைந்து - மணந்து, துறவியகழ்ந்து - கிணறு வெட்டி.

67. இவண் - இவ்விடம், போதும் - பொழுதும், நறை - வாசனை.

68. பீடுஉறு - பெருமைபொருந்திய, மாடு - பக்கம், இன்றும்வாய்ப் புகல்வேன் - இன்று உம்மிடம் கூறுவன். என்பு - எலும்பு, பெண்ணைமடல் - பனையின் கருக்கு. மடலேறுவர் ஆடவர், மடலேறுவதாகக் கூறுவர் பெண்டிர்.

69. அவியும் - கெடும், அங்குரியாது - முளையாது, கவின் - அழகு.

70. பூழியர்கோன் - கூன்பாண்டியன், காழியர்கோன் - திருஞானசம்பந்தப்பெருமான், வாழ் இயல்மங்கை - வசிக்கின்ற அழகிய தலைவி.

71. பண் ஆர்மொழி - இசையமை சொல், ஏக்கம் - ஏங்கல், அழுதல்.

72. பாங்கர் - பக்கம், தெய்வேந்திரன் நீள்நகர் - அமராபதி

73. கொங்கு - வாசனை, தேன், கோட்டலர் - கோட்டுப்பூ, மரப்பூ, போதும் - போவோம்.

74. கடம்ப அடவி - கடம்பங்காடு, மீள்வன் - திரும்புவன்.

75. அகலம் - மார்பு, சொல்மாது - கலைமகள்.

76. பௌவம் - கடல், எல் - பகல், எவ்வம் - துன்பம்.

77. வரம்பில் இன்பம் - எல்லையற்ற சுகம், கோது - குற்றம், வளன் - வளப்பம், 'மங்கையற்' என்பதை 'மங்கையெற' என்று படிக்க.

78. குரல் - கதிர், சேறதும் - செல்வோம்.

79. மிடையும் - நெருங்கும், புனம் - தினைப்புனம், அளி காள் - வண்டுகளே, இதண் - பரண், விடைஉந்திய - இடபத்தைச் செலுத்திய. கழைவில்லோன் - கரும்புவில்லைக்கொண்ட மன்மதன்.

80. தேன்நேர் - தேனையொக்கும், வகுத்திடுவீர் - உரைப் பீர், பால்நேர் - பால்போல் வெளுத்த.

81. முப்புவனம் - மேல். கீழ், நடுவிலுள்ள உலகங்கள், கைப்பெரு வண்மை - கையிலமைந்த பெருங்கொடை, உள்சமழ்க் கும் - உள்ளம் நாணும்.

82. பதுமக் கதவம் தாமரைக்கதவு, தகவு - தகுதி.

83. கேழல் - பன்றி, வேங்கை - புலி, கார் - மேகம்.

84. தாரு - கற்பக தரு, இணை - ஒப்பு, கங்குல் - இரவு.

85. அங்கி - நெருப்பு, செய்யாள் - இலக்குமி, செய் - வயல், மன்றல் - மணம்.

86. தேன்மலர் - உம்மைத்தொகை. தேனும் பூவும், ஆர்த்து அணிந்து - பருகியும் பூண்டும்.

87. மோனத்தவர் - மௌனம்பூண்ட தவசிகள், கோன் நத்த - தலைவன் விரும்ப,

88. மௌவல் - முல்லை, கோதை - மாலை, வெண் குஞ்சரம் - வெள்ளையானை, ஐ - அழகு.

89. அவசிதி - பயனில்பொருள்.

90. மானை - குதிரையை, பகர்தல் - விற்றல்,

91. பல என்பன நான்கும் சொற்பொருட் பின்வருநிலை பிகம் - குயில்.

92, பூகம் - குரங்கு, பசலை - மாறுபடு நிறம், கேகயம் - மயில், ஊடல் - பிணக்கு.

93. மேகம் தாம் எனும் ஓதி - மேகத்துக்கு ஒப்பான கூந்தல் (உடையவள்) உளத்து அளிவுற்று உமைக்குப் பாகம் தரும் சொக்கர் என்க. இனி உளத் தளி உற்ற உமைக்கு என்றுமாம். உளத்தளி - மனக்கோயில்.

94, செவ்வனம் - நன்கு. ஓது - கூறு.

95. புரை - நிகர், உரை - சொல்.

96. தேங்கும் - தங்கும், ஓர்தல் - ஆராயதல.

97. விட்புலவாணர் - விண்ணிடம் வாழ்கின்ற தேவர், பெட்பு - விருப்பு, பண் புரை - இசை யொத்த.

98. தென்றல்-தெற்கிலிருந்துவரும்காற்று, ஆசு - குற்றம்

99. காகளம் - கொம்பு, நகம் - மலை.

100, வேலாவலயம் - கடலாற் சூழப்படும் பூமி, மாலானவர்- திருமாலின் தன்மையர்.

101. கை அம் புயம் - கையாகிய தாமரை, அடுக்கல் - மலை, விரை - வாசனை.

102. செல் - மேகம், எவ்வாய் - எவ்விடம்.

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1